SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I பரீட்சை – ஜனவரி 2022
**(Level I Examination - January 2022)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜனவரி 2022**

# (104) வணிகச் சூழல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (4)

**1.2** (4)

**1.3** (2)

**1.4** (1)

**1.5** (2)

**1.6** (3)

**1.7** (1)

**1.8** (1)

***1.9*** (4)

**1.10** (4)

**1.11** பிழை

**1.12** பிழை

**1.13** சரி

**1.14** பிழை

**1.15** சரி

*(02 புள்ளி வீதம், மொத்தம் 30 புள்ளிகள்)*

**1.16.** உணவு, நீர், உடை, தங்குமிடம், தூக்கம்

***(02 புள்ளிகள்)***

**1.17.**

- **தொழில் முயற்சியாண்மை** என்பது வணிக வாய்ப்புகளை அடையாளம் காணவும், மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் புத்தாக்கம் மற்றும் இடர் மேலாண்மை ஆகும்.
- **தொழில் முயற்சியாண்மை** மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையிலான இடைத்தரகராகும்.
- **தொழில் முயற்சியாண்மை** என்பது புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துதல், புதிய நிறுவன அமைப்புகளை உருவாக்குதல் அல்லது புதிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் தற்போதுள்ள முறையை மாற்றும் செயல்முறையாகும்.
- **தொழில் முயற்சியாண்மை** என்பது நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்வது ஆகும்.
- **தொழில் முயற்சியாண்மை** என்பது ஒரு புதிய வணிகத்தை வடிவமைத்தல், தொடங்குதல் மற்றும் நடத்துதல் போன்றவற்றின் செயல்முறையாகும்.
- தொழில் முயற்சியாளர் என்பவர் ஒரு வாய்ப்பை உருவாக்கி, அதைப் பயன்படுத்திக் கொள்பவர். தொழில்முயற்சி செயன்முறை அனைத்துச் செயற்பாடுகளையும் மற்றும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நிறுவனங்களை உருவாக்குவதில் உள்ள செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

***(02 புள்ளிகள்)***

**1.18. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகள்**

| பொருட்கள் | சேவைகள் |
|---|---|
| தொட்டுணரத்தக்க விடயங்கள் | தொட்டறிய முடியாத விடயங்கள் |
| உற்பத்தியும் நுகர்வும் ஒரே நேரத்தில் நிகழ்வதில்லை | உற்பத்தியும் நுகர்வும் ஒரே நேரத்தில் நிகழ்கின்றன |
| ஒரே வகையான இயல்பு | நேரம் மற்றும் இருப்பிடத்தின் அடிப்படையில் மாறுபடும் (பலவகையான) |
| சேமித்து பின்னர் பயன்படுத்தலாம் | சேமித்து பின்னர் பயன்படுத்த முடியாது |
| உற்பத்தி செய்ய அதிக மூலதனம் பயன்படுத்தப்படுகிறது | உற்பத்தி செய்ய அதிக உழைப்பு பயன்படுத்தப்படுகிறது |
| உடைமை பகிர்ந்தளிக்கப்படலாம் | உரிமை கோரிக்கைகளை இடமாற்றம் செய்ய முடியாது |
| பெரும்பாலும் ஒவ்வொரு உருப்படியின் தரமும் ஒரே மாதிரியாக இருக்கும் | சேவைத் தரம் தனிநபர்கள்/சேவை வழங்குநரைப் பொறுத்து மாறுபடும் |

| | |
|---|---|
| பண்டம் தொடர்பான வாடிக்கையாளர் உறவுகள் குறைவாக உள்ளன | சேவை தொடர்பான வாடிக்கையாளர் உறவுகள் அதிகமாக உள்ளன |
| அளவீடுகள் எளிதானது | தரத்தை அளவிடுவது எளிதல்ல |
| வாடிக்கையாளர் தயாரிப்பில் ஈடுபடவில்லை | வாடிக்கையாளர் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார் |
| கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை மீளக் கையளிக்க முடியும் | வாங்கிய சேவைகளை இடமாற்ற முடியாது |

***(02 புள்ளிகள்)***

**1.19. தொழில் முயற்சியாண்மைக்கான தேவையின் வளர்ச்சிக்கான காரணங்கள்**

1. இன்றைய வணிக உலகில் கடுமையான போட்டி காரணமாக, வணிக உலகில் நிலையாக இருப்பதற்கு புதிய விடயங்கள் உருவாக்கப்பட வேண்டும் (அதாவது, கண்டுபிடிப்புக்கான தேவை)
2. பன்முகப்படுத்தப்பட்ட வணிகங்கள் தற்போதுள்ள வளங்களை திறம்படப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம்
3. மாறிவரும் உலகில் உலகமயமாக்கலை எதிர்கொள்ள வணிகத்தை புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றுவதற்கான தேவை
4. வேகமாக மாறிவரும் வணிக சூழலில் ஒரு வணிகத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டிய அவசியம்
5. புதிய தொழில்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியம்
6. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் தனிப்பட்ட வருமானத்தை அதிகரிக்கவும் மற்றும் தரமான பொருட்களை உட்கொள்வதற்கான வாய்ப்பைப் பூர்த்தி செய்யவும் வேண்டும்
7. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த அதிக பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம்
8. பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தியின் தேவைக்கு அவசியம்

***(02 புள்ளிகள்)***

aat SRI LANKA

**1.20.**

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் பங்கேற்பு
2. குறுகிய கால நோக்கத்திற்காக ஒரு தற்காலிக திட்டம்
3. பெரும்பாலாக ஒரு வணிக பெயரை அல்லது குறிப்பிட்ட வணிக இடத்தைக் கொண்டிருக்க மாட்டாது
4. வியாபார பதிவு செய்வது அவசியமன்று
5. சிறப்பு விதிகள் எதுவும் இல்லை
6. தொடர்ந்தியங்கும் தன்மை இல்லாமை

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 40 புள்ளிகள்)***

***பிரிவு A முடிவு***

*(மொத்தம் 40 புள்ளிகள்)* **பிரிவு B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01[பகுதி II] –வணிக அமைப்புக்கள்***

**(a)**

**(i)** தனியுடமை வியாபாரம்

***(01 புள்ளி)***

**(ii)**

| | | |
|---|---|---|
| 1 | உடைமை | ஒரு தனி நபருக்கு சொந்தமானது |
| 2 | மூலதனம் | மூலதனம் உரிமையாளரால் மட்டுமே வழங்கப்படுகிறது |
| 3 | நிர்வாகம் மற்றும் முடிவெடுப்பது | வணிகம் உரிமையாளரால் அல்லது அவரது மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. எனவே, வணிக முடிவுகளை தொழிலதிபரே எடுக்கிறார். |
| 4 | பொறுப்பு | ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு உள்ளது. |
| 5 | தனி சட்ட ஆளுமை | தனியான சட்ட ஆளுமை இல்லை. |
| 6 | வியாபார பதிவு | பதிவு கட்டாயமில்லை. |
| 7 | இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | தனியாக ஏற்றுக்கொள்வார் |
| 8 | வரிக் கொடுப்பனவு | வரிகள் தொழிலதிபர் பெயரில் தனிப்பட்ட முறையில் செலுத்தப்பட வேண்டும். வணிகத்தின் பெயரில் வரிகளைச் செலுத்த முடியாது. |
| 9 | கணக்கியல் மற்றும் கணக்காய்வு | கணக்கியல் மற்றும் கணக்காய்வு கட்டாயமில்லை |
| 10 | தொடர்ந்தியங்கும் தன்மை | தொடர்ந்தியங்கும் தன்மை இல்லாமை |

***(03 புள்ளிகள்)***

**(b) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் பிரதான அம்சங்கள்**

1. **உடைமை -** பங்குதாரர்கள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் உரிமையாளர்கள் ஆவர்.
2. **மூலதனம் -** பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனம் பெறப்படுகின்றது. பங்குகளை அல்லது ஏனைய பத்திரங்களை பொதுமக்களுக்கு வழங்க முடியும்.
3. **பங்குதாரர்களின் எண்ணிக்கை -** குறைந்தபட்சம் 01 மற்றும் அதிகபட்ச எல்லை காணப்படவில்லை.

aat SRI LANKA

4. **முகாமை -** ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் முகாமை பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப்படுகின்றது.
5. **பொறுப்பு -** பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் தனியான சட்ட ஆளுமை கொண்டுள்ளது.
6. **கட்டுப்பாடு -** ஆளுகை என்பது நியதிச் சட்டரீதியான கட்டுப்பாடு மற்றும் பங்குதாரர்களின் கூட்டிணைந்த கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுள்ளது.
7. **சட்ட ஆளுமை -** தனியான சட்ட ஆளுமை கொண்டுள்ளது.
8. **கூட்டிணைப்பு -** 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி கூட்டிணைத்தல் கட்டாயமாகும்.
9. **தொடர்ச்சித்தன்மை -** தொடர்ந்தியங்கும் தன்மை வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியிற்கு உள்ளது.
10. **கணக்கியல் மற்றும் கணக்காய்வு -** கணக்கியல் மற்றும் கணக்காய்வு கட்டாயமாகும்.
11. **வரிக் கொடுப்பனவு -** கம்பனியின் பெயரில் வரி செலுத்த வேண்டும்.
12. **கலைப்பு -** பங்குதாரர்கள் தானாக முன்வந்து கம்பனியைக் கலைக்கலாம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் நீதித்துறையின் மேற்பார்வையின் கீழ் கலைக்கலாம்.
13. **கம்பனியின் பெயர் -** கம்பனியின் பெயரைக் குறிப்பிடும்போது, பட்டியலிடப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியானது "Public Limited Company" என்ற சொற்பதம் அல்லது "PLC" என்ற சுருக்கத்துடன் முடிவடையும்.
14. **வாக்குரிமை -** ஒருவருக்கு வாக்குரிமை அவரிடமுள்ள பங்குகளின் அடிப்படையிலாகும்.
15. **பங்குச் சந்தையில் பட்டியலிடும் சாத்தியம் -** பங்குச் சந்தையில் பட்டியலிடும் சாத்தியம் உண்டு.
16. **தொடர்பினை ஏற்படுத்துவதற்கு பதிவேடுகளைப் பராமரித்தல் -** கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபடுகின்ற பதிவு விவரங்களை பணிப்பாளர் சபை பராமரிக்க வேண்டும்.
17. **கடன் பரீட்சைப் பட்டியலை நடத்துவதன் அவசியம்** - பங்குதாரர்களுக்கு பங்கிலாபத்தை திருப்பிச் செலுத்துவதற்கான திறனின் சோதனை தேவைப்படுகிறது.

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

***வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள் (காப்புறுதி)***

**(a)**

- தீ காப்புறுதி
- சொத்து காப்புறுதி
- திருட்டு மற்றும் கொள்ளை காப்புறுதி

***(02 புள்ளிகள்)***

**(b)**

**காப்புறுதி செய்வதற்கான ஆர்வம்:**

காப்புறுதி செய்வதற்கான ஆர்வக் கொள்கையின் படி பின்வருபவை சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் ஒரு சொத்து காப்பீடு செய்யப்படுவதற்கு நிரூபிக்கப்பட வேண்டும்.

- சொத்து இருப்பின் ஏற்படும் பண அடிப்படையிலான நன்மைகள் மற்றும் அது அழிக்கப்பட்டால் ஏற்படும் குறிப்பிட்ட தீமை.
- தீமையின் பண மதிப்பை கணக்கிட கூடியதாக இருக்க வேண்டும்
- காப்பீட்டாளர் மற்றும் சொத்துக்கு இடையிலான உறவு சட்டப்பூர்வமாக நிரூபிக்கப்படலாம்

அதன்படி, தீ விபத்தில் சிக்கிய வரையறுக்கப்பட்ட கோகு கம்பனியின் களஞ்சிய அறையில் இருந்து பண மதிப்பிடக்கூடிய பயனை பெற வேண்டும், இதேபோல் வரையறுக்கப்பட்ட கோகு கம்பனியிற்கான இழப்பு குறிப்பாக பண அடிப்படையில் நிரூபிக்கப்பட வேண்டும். மேலும், சட்டப்பூர்வமான ஒப்பந்தம் போன்றவொரு ஆதாரம், வரையறுக்கப்பட்ட கோகு கம்பனி மற்றும் களஞ்சிய அறைக்கும் இடையிலான உறவை நிரூபிக்க சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

SRI LANKA

**அண்மிய காரணிகள்:**

அண்மிய காரணிகள் என்பது, காப்புறுதி செய்யப்பட்ட ஒரு சொத்து சேதமடையும் போது, மிக உடனடியான காரணம் காப்புறுதியால் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே, வரையறுக்கப்பட்ட கோகு கம்பனி பெற்ற காப்புறுதியில் சேதங்களை கோருவதற்கான ஒரு அண்மிய காரணியாக “தீ” குறிப்பிடப்பட வேண்டும்.

***உதாரணம்:*** மரங்கள் விழுந்து அல்லது வாகன மோதல்களால் தீ விபத்து ஏற்பட்டு கட்டடம் தீயால் அழிக்கப்படும்போது தீ காப்புறுதி கொண்ட ஒரு கட்டிடத்திற்கு இழப்பீடு வழங்க முடியாது.

***(04 புள்ளிகள்)***

**(c)** காப்புறுதியானது வணிக அபிவிருத்திக்கு மாத்திரமன்றி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

**1. காப்புறுதி நிறுவனங்கள் பல்வேறு முதலீடுகளில் ஈடுபடுகின்றன**

காப்புறுதியானது தவணைகளின் மூலம் நிதியை உருவாக்குகின்றது. அரசாங்க பத்திரங்கள் போன்ற பல்வேறு முதலீடுகளில் ஈடுபட்டுள்ளன. உருவாக்கப்படும் நிதிகள் ஒரு நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திக்காக முதலீடு செய்யப்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன.

**2. வணிக விரிவாக்கம்**

காப்புறுதியானது வணிக விரிவாக்கத்திற்குப் பங்களிக்கிறது, இதன் விளைவாக நாட்டின் தேசிய உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி சாதகமாகவும் மற்றும் அதிகரிக்கும்.

**3. காப்புறுதியானது நிதி உறுதிப்பாட்டில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது**

சேவைத் துறையில் மிக முக்கியமான தொழில்களில் ஒன்று காப்புறுதியாகும். அரசாங்கத்திற்கு அவர்கள் பெரிய அளவில் வரி செலுத்துபவர்கள். இதன் விளைவாக, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பராமரிப்பதில் காப்புறுதித் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது.

**4. தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு பாதுகாப்பை வழங்குதல்**

காப்புறுதி நிதி ஆதரவை வழங்கி தனிநபர்களும் வணிகமும் வாழ்க்கை சுழற்சியின் ஒவ்வொரு படியிலும் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கிறது. இது சாத்தியமாக ஏற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த இடர் தணிப்பு பொறிமுறையை வழங்குகிறது.

aat SRI LANKA

**5. வேலை வாய்ப்புகளை வழங்குதல்**

காப்புறுதித் துறையில் அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வேலையின்மைப் பிரச்சினையைத் தணித்தல்.

**6. வணிக வளர்ச்சி மற்றும் நிலைபேறு மீது சாதகமான தாக்கம்**

இது திருட்டுகள், இயற்கை பேரழிவுகள் மற்றும் ஊழியர்களின் மோசடிகளுக்கு ஒரு தீர்வாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இது வணிகத்தை நிலையாக தக்கவைக்க உதவுகிறது.

**7. சார்ந்திருப்பவர்களுக்கு ஆதரவு வழங்குதல்**

ஒரு குடும்பத்தின் நல்வாழ்வு அனைவருக்கும் முக்கியமானது மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் மிகப்பெரிய கவலையாகும். பெரும்பாலான மருத்துவக்

காப்புறுதியானது, வெவ்வேறு வகையான உடல்நல அபாயங்களுக்கு எதிராக தனிநபர்களை நிதியியல் ரீதியாகப் பாதுகாக்கிறது.

**8. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்**

காப்புறுதித் துறையானது உள்நாட்டுச் சேமிப்பைத் திரட்டுவதன் மூலம் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. காப்புறுதியானது இழப்புக்களைத் தணிப்பதற்கும், நிதி உறுதிப்பாட்டிற்கும், வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது.

**9. ஏற்படும் இடரை பரப்புதல்**

காப்புறுதியானது இழப்பு ஏற்படும் அபாயத்தை காப்பீட்டாளரிடமிருந்து காப்புறுதி நிறுவனங்களிற்கு நகர்த்துகின்றது. காப்புறுதியால் அதிக எண்ணிக்கையிலான மக்கள் மத்தியில் இடரை பரப்பலாம்.

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - வணிக அமைப்புக்களில் வியாபாரம்***
***அத்தியாயம் 05 - வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு***

**(a)**

1. சந்தையில் எளிதான முறையில் வணிகம் சரியான நேரத்தில் சரியான வாடிக்கையாளரை சென்றடைய உதவுதல்
2. விநியோக செயல்திறனை அதிகரிக்கிறது (விநியோக செலவைக் குறைப்பதன் மூலம்)
3. தயாரிப்பு மற்றும் வாடிக்கையாளரின் இடையே ஒரு சமநிலையை உருவாக்குதல்
4. விநியோகச் சங்கிலியை விரைவுபடுத்துதல்
5. கூடுதல் சேவைகளை வழங்குதல் (போக்குவரத்து, ஏற்பாட்டியல் அனுமதி, பண்டகசாலை போன்ற ஏனையவை உட்பட)
6. வணிகத்தின் சுமையைக் குறைத்தல்

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. விநியோகிக்கும் அளவு
3. விநியோகிக்கும் தூரம்
4. இடைத்தரகர்
5. விநியோகக் கிரயம்

6. சந்தை ஒழுங்குமுறைகள்
7. போட்டி அனுகூலம்
8. விநியோகிக்கும் வேகம் / பதிலளிப்புக்கான நேரம்
9. தொடர்புடைய கிரயம் / கூடுதலான கிரயம்
10. நம்பகத்தன்மை / தகவல் நம்பகத்தன்மை
11. நிகழ்நிலை தளம் வழியாக எளிதான அணுகல்
12. பல்வேறு / தேர்வுக்கான வாய்ப்புகள்

***(03 புள்ளிகள்)***

**(c)**

**1. வாடிக்கையாளராக வணிகத்தில் அரசாங்கத்தின் தலையீடு**

அரசுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதன் மூலம் அரசு வணிகங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு வாடிக்கையாளராக, வணிகங்களின் இருப்பு மற்றும் வளர்ச்சியில் அரசாங்கத்தின் தாக்கம்.

**2. ஒரு போட்டியாளராக வணிகத்தில் அரசாங்கத்தின் தலையீடு**

அரசாங்கம் தனியார் துறையுடன் சேர்ந்து சில வணிகங்களைச் செய்து வருகிறது. அரச கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் சந்தைக்குப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் தனியார் துறையுடன் போட்டியிடுகின்றன.

**3. உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் வழங்குநராக வணிகங்கள் மீதான தலையீடு**

நெடுஞ்சாலைகள், தகவல் தொடர்பு வலையமைப்புகள், மின்சாரம், நீர், கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, மனிதவலு மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகள் போன்ற தொழில்களைத் தொடங்குவதற்கும் நடத்துவதற்குமான உட்கட்டமைப்பு வசதிகளை அரசு வழங்குகிறது. தனியார் துறையை ஊக்குவிப்பதற்காக பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புகளாக அறிமுகப்படுத்தலாம்.

**4. கட்டுப்பாட்டாளராக அரசாங்கத்தின் தலையீடு**

நாட்டில் வணிக நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசு பல்வேறு அரச முகமைகள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான வாரியங்கள் மற்றும் ஆணையங்களை நிறுவி, அதன் மூலம் நாடு முழுவதும் வணிகத்தை கண்காணித்து வருகிறது. எனவே ODO அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் ஒழுங்குமுறைகள் மற்றும் சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

**5. ஒரு ஊக்குவிப்பு வழங்குநராக வணிகத்தில் அரசாங்கத்தின் தலையீடு**

அரசாங்கம் வணிகங்களை நடத்தவும், விரிவுபடுத்தவும், மேம்படுத்தவும் ஊக்கத் துணைகளை வழங்குகின்றன. மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் (மாநகர சபைகள்) பல்வேறு வழிகளில் ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றன.

**6. அரசாங்கம் வணிக மேம்பாட்டிற்கான நிதி உதவி / வசதிகளை வழங்குவதன் மூலம், ஆதரவளிக்கிறது**

பிரதானமாக அரச வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களினால் தொழிற்கொள்வோர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படும். இது நிலையான மற்றும் தொழிற்பாட்டு மூலதனத்திற்குரிய நிதியை வழங்குகிறது.

**7. அரசு வணிகர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் பயிற்சி அளிப்பதில் உதவுகிறது**

அரசாங்கத்திடம் ஆலோசனைகள் மற்றும் பயிற்சித் தேவைகளை வழங்க பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. ODO தங்கள் வணிகத்தை மேம்படுத்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் அந்த வசதிகளைப் பெறலாம்.

**8. தகவல்களை வழங்குதல்**

அரசாங்கத்தால் வணிகங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்க் அமைப்புகள் மற்றும் முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் பல்வேறு தகவல்களை வழங்குகிறது. ODO மூலோபாயத்தைத் தயாரிக்கும் போது அத்தகைய தகவல்கள் தேவைப்படுகின்றன.

aat SRI LANKA

**9. பரிமாற்ற வசதிகளை வழங்குதல்**

வணிக நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்யும் போது விசேட வசதிகளை வழங்குதல், பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களுக்கான தடைகளைக் குறைத்தல் மற்றும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அனுமதியளித்தல்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

| |
|---|
| ***அத்தியாயம் 02 – வணிக சூழலும் வணிக நிறுவனத்தில் அதன் தாக்கமும்***<br>***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்*** |

**(a)**

- நாணயம்/ பணம்
- இலத்திரனியல் பணம் [இலத்திரனியல் பணப்பை, மறைமுகப் பணம்]
- கடன் அட்டை
- காசோலைகள் மற்றும் வங்கிப் பணம்

***(02 புள்ளிகள்)***

**(b)**

1) நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகளை ஏற்றுக் கொள்ளல்
2) வாடிக்கையாளர் கணக்குகளுக்கு இடையில் வைப்புகளை மாற்றுதல்
3) புதுப்பித்த, நிலையான வங்கி மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்
4) முற்பண வசதிகளை வழங்குதல்
5) வாடிக்கையாளர்களின் பெயரில் நிலையான கட்டளைகளை அமுல்படுத்துதல்
6) வாடிக்கையாளர்களின் வருவாய்களைச் சேகரித்தல்
7) நிறுவனங்களின் பங்கு வெளியீட்டு முகாமைப்படுத்தல்
8) நிதி ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
9) திறைசேரி முறிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை
10) வங்கி வரைவோலைகள் மற்றும் கொடுப்பனவுக் கட்டளைகளை வழங்குதல் மற்றும் மாற்றுதல்
11) நாணய கடிதங்களை வழங்குதல்
12) குத்தகை சேவைகள்
13) அடமான சேவை
14) கடன், வரவு மற்றும் ஸ்மார்ட் அட்டைகள் போன்ற இலத்திரனியல் பணத்தை வழங்குதல்
15) அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதிகளை வழங்குதல்
16) பெட்டக வசதிகள்
17) வங்கி உத்தரவாதங்களை வழங்குதல்

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c)** ஒரு வெற்றிகரமான வணிகமாக இருப்பதற்கு, பங்குதாரர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வது அவசியம். எனவே, பலங்கள் மற்றும் பலவீனங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண வேண்டும். ஒரு வணிகம் அதன் சுற்றுச்சூழலின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க புறக்கணித்து விட்டால், வணிகங்கள் வீழ்ச்சியடைய முனையும். **பண்டார தேநீர் கடையின்** சுற்றுச்சூழலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**1. புதிய துறைகளில் வணிக வளர்ச்சியை ஊக்குவித்தல்**

சுற்றுச்சூழல் பகுப்பாய்வுகள் மூலம் வணிகங்கள் செயல்படுகின்ற முறையில் பாதுகாப்பாக இருப்பதற்கு ஊக்குவிக்கின்றன. நிறுவனம் புதிய பிரிவை அடையாளம் காண முடிந்தால், வணிகங்களை அந்த பிரிவுக்கு விரிவுபடுத்தலாம்.

**2. வாய்ப்புகளை இனங்காணல்**

ஒரு வணிகம் திடமாக இருப்பினும் அவை மேலும் விரிவாக்கத்தை நாடத் தயங்கக்கூடாது. எனவே, வெளிப்புற சூழலை பகுப்பாய்வு செய்வதன் மூலம், வணிகத்திற்கான சந்தையில் உள்ள வாய்ப்புகளை அடையாளம் காண எளிதாக்கும்.

**3. அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல்**

சந்தையில் பெரிய போட்டி இருக்கும்போது, நிறுவனங்கள் தங்கள் போட்டியாளர்களிடமிருந்தும் பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். ஒரு முறையான சுற்றுச்சூழல் பகுப்பாய்வின் மூலம் முகாமையாளர்களுக்கு வெளிச் சூழலில் தொடர்புடைய அச்சுறுத்தல்களை முன்கூட்டியே அடையாளம் காண உதவும்.

SRI LANKA

**4. குறிக்கோள்களை அடைய உதவுகிறது**

வெளிப்புற சுற்றுச்சூழல் பகுப்பாய்வானது வணிக நிறுவனத்திற்கு சுற்றுச்சூழலை ஆய்வு செய்வதற்கும் அதற்கேற்ப மூலோபாயங்களை உருவாக்குவதற்கும் உதவுகிறது, இது குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைய வழிவகுக்கும்.

**5. சந்தையைப் புரிந்து கொள்ள உதவுகிறது**

ஒவ்வொரு வணிகமும் சந்தை இடத்தை நிலையானதாக இல்லாமல், மேலும் சந்தையில் என்ன நடக்கின்றது என்பதனை அறிந்திருப்பின் அதற்கேற்ப மூலோபாயங்களை தீர்மானிக்கவும் அவற்றைச் செயல்படுத்தவும் முடியும்.

**6. சந்தை போக்குகள் / எதிர்காலத்தை முன்கூட்டியே அறிய உதவுகிறது**

சூழல் அடிக்கடி மாறுகிறது. எனவே சுற்றுச்சூழல் பகுப்பாய்வானது வணிக நிறுவனத்தின் எதிர்கால வாய்ப்புகளை முன்கூட்டியே அறிய உதவுகிறது.

**7. பலங்களை மற்றும் பலவீனங்களை அடையாளம் காணுதல்**

நிறுவனம் அதன் பலங்களை அடையாளம் கண்டவுடன், மேம்பாடுகள் மூலம் அதன் பலத்தை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், வணிகங்களின் பலவீனங்களை அடையாளம் காண்பது அத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திற்குக் குறைப்பதன் மூலம் நிறுவனம் முன்னோக்கிச் செல்ல முடியும்.

***(04 புள்ளிகள்)***
**(*மொத்தம் 10 புள்ளிகள்*)**

***பிரிவு B முடிவு***

(*மொத்தம் 20 புள்ளிகள்*)

**பிரிவு C**

## வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

**(a)**

- **உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல்** - ஐரோப்பிய நாடுகளுக்கு அதன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்து, அவை பிரசித்தி பெற்ற சிறப்பங்காடியின் பண்டக்குறி ஒன்றின் கீழ் வாடிக்கையாளர்களிடையே பிரபல்யமாகியுள்ளது.
- **மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகல்** - நிறுவனம் தாய்லாந்தில் வெளிநாட்டு மூலப்பொட்களை வழங்குநராக மாறியுள்ளது.
- **அதிக இலாப வாய்ப்புகள்** - கோவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சில வழக்கமான ஓடர்கள் இரத்துச் செய்யப்பட்டாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து கையுறைகளுக்கான புதிய ஓடர்களை நிறுவனம் பெற்றுள்ளது.
- **வரிச்சலுகைகள் - ரூபெக்ஸ்** உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கான வங்கிகள் மற்றும் பல அரசாங்க நிறுவனங்களால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற்றுள்ளது.
- **போட்டி அனுகூலம்**
- **அதிகரிக்கப்பட்ட வருமானம்**

***(03 புள்ளிகள்)***

**(b)**

| பலங்கள்: | பலவீனங்கள்: |
|---|---|
| • கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய பட்டியலிடப்பட்ட கம்பனியாக இருத்தல்<br>• புதிய தொழிற்சாலை தன்னியக்கச் செயற்றிட்டங்கள் (புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாடு)<br>• ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாளராக இருத்தல்<br>• வாடிக்கையாளர்கள் மத்தியில் வணிகத்தின் புகழ்பெற்ற பண்டக்குறி<br>• புதிய பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதும் ஒரு மாத பணிப் பயிற்சி (ஊழியர்களின் திறன்கள்)<br>• மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர் ஈடுபாட்டுடன்கூடிய அரைவாசி தன்னியக்கப்படுத்தப்பட்ட செயன்முறையாகச் செயற்படுதல் | • விரும்பத்தகாத (தவிர்க்க முடியாத மணம்) பணிச் சூழல்<br>• அதிக ஊழியர் வெளியேற்றம்<br>• மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறாமை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கப்பெறுதல்<br>• ஒரு மாத பணிப் பயிற்சி பெற்ற பின்னர் ஊழியர்கள் வெளியேறுதல் |

aat SRI LANKA

| வாய்ப்புகள்: | அச்சுறுத்தல்கள்: |
|---|---|
| • வெளிநாட்டு மூலப்பொருள் வழங்குநர்களை கண்டுபிடிக்கும் சாத்தியம்<br>• கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து கையுறைகளுக்கான புதிய ஓடர்களைப் பெறுதல்<br>• ஏற்றுமதியாளர்களுக்கு வங்கிகள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் வரி மற்றும் பிற சலுகைகள்.<br>• வங்கிகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக்கொள்ளல் | • கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட டாலர் நெருக்கடி<br>• வீட்டுத் திட்டங்களுக்காக இறப்பர் தோட்டங்களை விற்பனை செய்தல்<br>• பிரதேசத்தில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக்கள்<br>• கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வழக்கமான ஓடர்கள் இரத்துச் செய்தல் |

***(06 புள்ளிகள்)***

**(c)** ஒரு புறம் **ரூபெக்ஸ்** ஒரு உற்பத்தியாளர், மறுபுறம் அது ஒரு ஏற்றுமதியாளர். இதனால், போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் என்பன **ரூபெக்ஸிற்கு** முக்கிய பங்கு வகிக்கின்றன.

**1. வாடிக்கையாளரின் தேவைகளை தொடர்ந்து பூர்த்தி செய்யும் திறன்**

போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் சேவைகள் சரியான அளவு மற்றும் தரத்தில், சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான வாடிக்கையாளருக்கு சரியான விலையில் சரியான தயாரிப்பை கொண்டு சேர்க்கின்றன.

**2. அவர்களின் அனைத்து பணிகளையும் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதன் ஊடாகச் செலவைக் குறைத்தல்**

போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் சேவைகள் ஒரு உற்பத்தி நிறுவனத்திற்குச் செலவுகளை எவ்வாறு குறைக்கவும், சந்தையை ஆராய்ச்சி செய்வதன் மூலம் விநியோக சங்கிலியை பராமரிக்கவும், தேவைகளை வடிவமைப்பதன் மூலம், உற்பத்திகள் மற்றும் கொள்வனவுகள் பற்றிய முடிவுகளை எடுக்கவும் வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

**3. போட்டியை சமாளிக்கும் திறன்**

ஏற்பாட்டியல் அமைப்பைத் திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் என்பனவற்றால் செலவு குறையும். இதனால் பொருட்களின் விலை குறையும். அந்த விலை போட்டியாளரின் விலையை விட குறைவாக இருக்கும். எனவே நிறுவனம் சந்தையில் எளிதாக போட்டியிடவும் போட்டி நன்மையை பெறவும் முடியும்.

aat SRI LANKA

**4. இயந்திரங்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் நேரத்தை குறைத்தல்**

**ரூபெக்ஸ்** போன்ற வணிகத்திற்க்கு, மூலப்பொருள் கொள்முதல், இருப்பு கட்டுப்பாடு, உற்பத்தி திட்டமிடல் போன்றன திறமையான மற்றும் பயனுள்ள போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் சேவைகளினால் வெற்றிகரமாக இருக்கும். சரியான திட்டமிடல் மற்றும் ஏற்பாட்டியல் நேரத்தை குறைக்க உதவும்.

**5. சந்தை விலையை அதிகரிக்க முடியும்**

**ரூபெக்ஸிற்கு** சரியான போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் அமைப்பு இருக்கும்போது, வாடிக்கையாளர்களின் ஓடர்களை சரியான நேரத்தில் பூர்த்தி செய்ய முடியும். எனவே தொடர்ந்தும் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடிவதுடன் சந்தை விலையை அதிகரிக்கவும் முடியும்.

**6. சரியான மூலப்பொருட்களை பெற்றுகொள்ளும் திறன்**

ஒரு உற்பத்தி நிறுவனம் சரியான அளவு, தரம் மற்றும் நேரத்தில் உற்பத்திக்கான சரியான மூலப்பொருட்களை வாங்க முடிந்தால் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் சேவைகள் நன்மை பயக்கும்.

***(04 புள்ளிகள்)***

**(d)** கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின்படி, **ரூபெக்ஸ்** இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது

**1. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்**

நாட்டின் வளங்களை **ரூபெக்ஸின்** வணிக நோக்கங்களுக்காக அதிகரிப்பதும் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவதும் மக்களின் கொள்வனவு சக்தியை மேம்படுத்தும். எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் முழு வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

**2. வேலைவாய்ப்பிற்கு பங்களித்தல்**

வணிகத் துறை நிறுவனங்களுக்கு மனித வளங்களை பணியமர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்பு விகிதம் அதிகரிக்கும். இந்த நிபந்தனை அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உதவுகிறது. குறிப்பாக, இது நிலையான வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி, வறுமையைக் குறைத்தல், வருமான செல்வத்தை மறுமுதலீடு செய்தல் போன்ற சாதகமான நிலைமைகளை உருவாக்கும். ஒரு உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக **ரூபெக்ஸ்** பல்வேறு வழிகளில் வேலை வாய்ப்புகளை வழங்குகிறது.

உதாரணம் - தொழிற்சாலையில் வேலை வாய்ப்புகளை வழங்குதல்.

**3. சென்மதி நிலுவையின் வர்த்தகக் கணக்கில் உள்ள பற்றாக்குறையைக் குறைப்பதற்கான ஆதரவு**

ஐரோப்பிய நாடுகளில் நிலையான சந்தையைக் கொண்ட ஒரு பிரபலமான ஏற்றுமதியாளராக அந்நியச் செலாவணியை ஈட்டும் **ரூபெக்ஸ்**, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க உதவுகிறது. இறுதியில், இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

**4. சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல்**

தற்போது சுற்றாடலை நிலையான அபிவிருத்தித் துறையாக பார்க்க முடியும். **ரூபெக்ஸின்** சுற்றுச்சூழலின் அணுகுமுறை நட்புரீதியை நோக்கி நகரலாம் மற்றும் ஒவ்வொரு வணிக முடிவிலும் நடவடிக்கையிலும் சுற்றுச்சூழலின் சேதத்தைக் குறைக்கலாம்.

**5. அரசின் கொள்கைகளைப் பின்பற்றுதல்**

அரசாங்கம் அவ்வப்போது அமுல்படுத்தும் கொள்கைகளினால் வணிகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தொழில் முயற்சியாளர்கள் அரசாங்கத்தின் இறைக்கொள்கையிலும் தொடர்புடைய ஏனைய பொருளாதார கொள்கைகளிலும் பெரும் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

**6. வருமானக் கொள்கை உருவாக்குதல்**

இறப்பரை உற்பத்தி செய்யும் கிராமவாசிகளின் வருமானத்தை அதிகரிக்க **ரூபெக்ஸ்** உதவுகிறது. அத்துடன் அந்த குடும்பங்கள் **ரூபெக்ஸின்** தொழிற்சாலைகளில் வேலை செய்யலாம். இது அந்த குடும்பங்களின் வருமான அளவை அதிகரிக்க வழிவகுக்கிறது.

**7. விதிகளுக்கு கட்டுப்படுத்துதல் மற்றும் கடைப்பிடித்தல்**

வணிகங்கள் அவ்வப்போது அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகின்றன. இது வணிகங்களுக்கு ஒரு நல்ல வணிக சூழலை உருவாக்க உதவுகிறது.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

(e)

1. ஒரு முதலீட்டாளரின் பங்குகளை விரைவாக பணமாக மாற்றுவதற்கு பங்குப் பரிவர்த்தனை நிலையம் உதவுகிறது, இதனால் முதலீடுகளின் பணப்புழக்கம் அதிகரிக்கிறது.
2. ஒரு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் ஒரு பத்திரம் கையாளப்படும் போது, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கான ஒரு நல்ல பிணையாக அமைகிறது.
3. பங்குப் பரிவர்த்தனை நிலையம் அதன் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கண்டிப்பாக செயல்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதுடன் நியாயமான கையாளுதலை உறுதி செய்கிறது.
4. ஒரு முதலீட்டாளர் தனது கைகளில் உள்ள பத்திரங்களின் உண்மையான மதிப்பை எளிதாக மதிப்பிட முடியும், ஏனெனில் தினசரி சந்தையில் அவற்றின் விலை மதிப்பு செய்தித்தாள்கள் மற்றும் வலைத்தளங்களில் வெளியிடப்படுகின்றன.
5. பட்டியலிடப்பட்ட பத்திரங்களை வாங்குவதும் விற்பதும் ஒரு சில நிமிடங்களில் நடைபெறுவதற்கான ஒரு பொறிமுறையை பங்குப் பரிவர்த்தனை நிலையமானது வழங்குகிறது.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

SRI LANKA

***பிரிவு C முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*